கண் வைத்திய
நிபுணர்களினால்
சிபார்சு செய்யும் கண்ணாடி
களைச் சரியாகக்
கொடுப்பவர்கள்.

எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

S.M.Fernando
OPTICIANS

SIGHT TESTED PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD,
NEAR BANK OF CEYLON
JAFFNA.

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 20 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 07 (03-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 76

# வடக்கு, கிழக்கிற்கு ரூ. 300 கோடியில் தொலைபேசி வசதி

## சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் டென்மார்க் நிபுணர்கள் வழங்குவர்

யாழ்ப்பாணம், மே 3

சுமார் முன்னூறு கோடி ரூபா செலவில் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு நவீன தொலைபேசி சேவை வழங்கப்பட இருக்கிறது.

சுவீடன் வழங்கும் நிதி உதவியைக் கொண்டு டென்மார்க் நிபுணர்கள் இந்த தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்தும் வேலைகளை மேற்கொள்வார்கள்.

வடக்கு, கிழக்கில் உள்ள சகல நகரங்களும் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் நேரடித் தொலைபேசி வசதியைப் பெற்றுக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தொலைபேசி சேவையை அமைப்பதற்கு சுவீடன் அரசு ஏழரைக்கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 300 கோடி ரூபாவை) நன்கொடையாக வழங்க முன் வந்துள்ளது.

இந்த இணைப்புகளை ஏற்படுத்தும் வேலைகளை டென்மார்க்கைச் சேர்ந்த "கார்ல் புரோ இன்டர்நஷனல்" (Carl Bro International) என்ற அமைப்பு மேற்கொள்ளவிருக்கிறது.

இந்த தொலைபேசி இணைப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்கான பூர்வாங்க வேலைகளைக்கவனிப்பதற்காக இந்த நிறுவனத்தின் சிரேஷ்ட தொலைத் தொடர்பு பொறியியலாளர் ஜான் லாங்கர் தலைமையில் நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தைப் பார்வையிட்டனர்.

புதிய திட்டத்தின்படி பண்ணை பரிவர்த்தனை நிலையத்தினூடாக யாழ்ப்பாணம் மட்டுமல்லாமல் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் தொடர்பு கொள்ளக்கூடியதாக நேரடித் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 500 தொலைபேசி இணைப்புகள் வழங்கும் திட்டம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்டத்துக்கு 500 தொலைபேசி இணைப்புகளை வழங்கும் திட்டம் தாமதமாகும் என்று தொலைத் தொடர்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு ஜூலை மாதத்துக்கு முன்னர் 500 தொலைபேசி இணைப்பு வழங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சுவீடன் அரசின் உதவியுடன் அமைக்கப்படும் நவீன தொலைபேசி சேவை இயங்க ஆரம்பிக்கும் வரை இந்த 500 இணைப்புகளும் செயற்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த 500 இணைப்புகளையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் அவசர அவசரமாக வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன. அவை தற்போது கொழும்பு வந்து சேர்ந்திருக்கின்றன என்றும் தெரியவந்தது.

ஆனால் இந்த இணைப்புகள் தற்போதைக்கு உடனடியாக வழங்கப்படமாட்டா என்று தெரியவருகிறது.

யாழ். மாட்டத்துக்கு தொலைபேசி இணைப்பை வழங்கும் தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரம் ஒன்று துணுக்காயில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் கோபுரத்துக்கு அருகே தேவையான கட்டடங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை.

கோபுரத்துக்கு அருகே உரிய கட்டடங்கள் அமைக்கப்பட்ட பின்னரே இந்த தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது சாத்தியம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-ஒ-3)

### சுபநேரம்

03-05-1990
வியாழக்கிழமை சித்திரை 20
சுபநேரம்:
07-26முதல் 08-56 வரை
இராகுகாலம்
01-26 முதல் 02-56வரை

## நோர்வூட்டில் ஈரோஸின் ஊர்வலமும், கூட்டமும்!

கொழும்பு, மே 3

ஈரோஸ் இயக்க அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் மேதின ஊர்வலமும், பொதுக் கூட்டமும் மலையகத்தில் - நோர்வூட்டில் - நடைபெற்றன.

ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் சுமார் ஐயாயிரம் மக்கள் வரை பங்குபற்றினர்.

நோர்வூட் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு எம். பி. திரு. இராமலிங்கம் தலைமை வகித்தார்.

எம். பி. ஜனாப் பஷிர், எம். பி. திரு. பரராஜசிங்கம், திருகோணமலையைச் சேர்ந்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



புனர்வாழ்வு நிதியிலை புகுந்து விளையாடியிருக்கினம் போலை.....!

## முல்லைத்தீவில் இன்று தேனிசை!

முல்லைத்தீவு நகரில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திறந்தவெளி அரங்கில் தமிழக எழுச்சிப் பாடகர் செல்லப்பாவின் தேனிசை நிகழ்ச்சி நடைபெறும். (ஒ-92)

### புதுடில்லியில் லட்சக்கணக்கில் மக்கள்

## பாக். மீது ராணுவ நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மே 3

பாகிஸ்தான்மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் அங்குள்ள காஷ்மீர் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை இந்தியா அழிக்க வேண்டும்.

இவ்வாறு கோரி - புதுடில்லியில் நேற்று மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது. வலதுசாரி பாரதியஜனதாக்கட்சி இந்தப் பேரணியை

## நேற்று முதல் பாடசாலைகள் இரு நேரம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்டத்தில் இரு நேரப் பாடசாலைத் திட்டம் நேற்று அமுலுக்கு வந்தது.

நேற்று அட்டமி-நவமியாக இருந்ததால், கணிசமான அளவு மாணவர்களே பாடசாலைகளுக்கு வந்திருந்தனர்.

ஒரு நாளைக்கு ஏழு மணித்தியாலங்கள் பாடசாலைகள் இயங்க வேண்டும் என்றும், ஆறு மணித்தியாலம் கட்டாயம் கற்பித்தல் நடைபெறவேண்டும் என்றும் கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதால், பாடசாலைகள் நேரவித்தியாசத்தில் ஆரம்பமாகின. [ஒ-3]

## நேற்றும் ஒன்பது தீவிரவாதிகள் சரணாம்!

கொழும்பு, மே 3

நுவரெலியா, மாத்தறை, பதுளை ஆகிய பகுதிகளில் நேற்று ஒன்பது தீவிரவாதிகள் சரணடைந்ததாக அரசு செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ)

## சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் தமிழ் மொழி தினம் 8ம் திகதி கொண்டாட ஏற்பாடு

கொழும்பு, மே. 3

நாடெங்கிலும் உள்ள தமிழ் மொழி மூலம் கற்பிக்கும் சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் எட்டாம் திகதி தமிழ் மொழி தினம் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி தினத்தைக் கொண்டாடு முகமாக பாடசாலை மட்டத்தில் இருந்து மாகாண மட்டம் வரை நடத்தப்பட்ட போட்டி முடி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாப். பிரதமர் இன்று வருகை

கொழும்பு, மே 3

ஜப்பானியபிரதமர் டொஷிகி கைபு இன்று நண்பகல் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்து சேருவார். (உ)

# புனர் வாழ்வுக்கு கிடைத்த நிதியில் பெரும் மோசடி!

### விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தகவல்

கொழும்பு, மே. 3

புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளுக்கு எனவெளி நாடுகளினால் வழங்கப்பட்ட நிதியில் பெரும் மோசடி நடைபெற்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

இந்த விடயம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருப்பதை அடுத்து அவர் இது தொடர்பாக விசாரணை நடத்தும்படி இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

மீளளிப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூகநலன் ஓம்புகை துறை அமைச்சர் திரு. ஏ. எம். எச். அதிகாரி தமது அமைச்சுக்குரிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் தமது அமைச்சின் கீழ் முன்னர் இடம் பெற்ற வரவு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது ஜே. வி. பி. மீண்டும் திடீர் தாக்குதல்!

கொழும்பு, மே 3

எல்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் ரோந்து சென்ற படையினர் மீது ஜே. வி. பி. தீவிரவாதிகள் திடீர் தாக்குதலை நடத்தினர்.

எனினும் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் படையினர் எவரும் காயமடையவில்லை என்றும்-

தாக்குதலை அடுத்து படை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 100 வாகனங்களுக்கு ஞாயிறு அனுமதிப் பத்திரம்

### விடுதலைப் புலிகள் வழங்குவர்

யாழ்ப்பாணம், மே. 3

விடுதலைப் புலிகளிடம் பதிவு செய்யப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனங்களில் முதல்தொகுதி வாகனங்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இதுவரையில் சுமார்300 வாகனங்கள்பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை கட்டம் கட்டமாக பரிசோதிக்கப்பட்டு சுமார் 100 வாகனங்கள் வீதிகளில் ஓடுவதற்குத் தகுதியானவை எனத் தெரியப்பட்டுள்ளன. இந்த நூறு வாகனங்களுக்கே 6 ஆம் திகதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட இருக்கிறது.

இதுவரை பதியப்பட்ட வாகனங்களில் கார்கள் மட்டுமே அடங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### அமைதிப் படை பற்றிய சர்ச்சையில் காரசாரம்:

# தமிழக ஆட்சி பறி போனாலும் எமக்கு கவலையில்லை -- கலைஞர்

சென்னை, மே 3

இலங்கையில் இருந்து அமைதிப் படையின் கடைசி அணி திரும்பியபோது அதனை வரவேற்க முதலமைச்சர் கருணாநிதி செல்லவில்லை என்ற பிரச்சினைமீண்டும் தமிழ்நாடு சட்டசபையில் எழுப்பப்பட்டது.

எம். எல். ஏக்கள் பலரும் இது குறித்து வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர். அப்போது ஒரு கட்டத்தில் முதலமைச்சர் குறுக்கிட்டார்.

"இந்த விஷயத்தில் எங்கள் ஆட்சியே பறிபோனாலும் கவலையில்லை தவறுகளைச் சுட்டிக்காட்டியே தீருவோம் என்று காரசாரமாகப் பதிலளித்தார்.

ரகுமான்கான்:- இந்திய இராணுவத்தை வரவேற்க முதலமைச்சர் செல்லவில்லை என்று குறை கூறுகிறார்கள்



முதல்வர் இதற்கு சரியான பதிலை முன்னர் கூறிவிட்டார். தவறைதவறு என்று சொல்வதில் எந்தத் தவறும் இல்லை.

குமரி அனந்தன் (காங்):- தமிழரைக் கொன்று குவித்த திருமதி பண்டாரநாயக்கா சென்னை வந்தபோது வரவேற்கச் சென்ற முதல்வர் இலங்கையில் இருந்து திரும்பிய இந்தியப் படையை வரவேற்கச் செல்லாதது தவறு.

கருணாநிதி: குமரிஅனந்தன் வீண் வம்பு வளர்ப்பதற்காகவே இங்கு வந்திருக்கிறார்.

திருமதி பண்டாரநாயக்கா தமிழரைக் கொன்று குவித்துவிட்டு சென்னைக்கு வரவில்லை, ஒரு பொதுக் கூட்டத்தில் சூடு நடந்தது. அதில் நான்கு, ஐந்து பேர் இறந்தனர். அந்தச் சமயத்தில் அவர் இங்கு வந்தார்.

அவரை வரவேற்க வேண்டும் என்றுஇந்தியஅரசுசொன்னதால்அவரை வரவேற்றேன்.

இப்போது கூட இலங்கையில் இருந்து ஒரு தகவல் வந்துள்ளது. அமைதிப்படை இருந்த முகாம்களிலெல்லாம் எலும்புக்கூடுகள் கிடப்பதாகச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்ந்த மனிதர்



மேதினத்தன்று குடாநாட்டின் நாலா பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான வெகு கவர்ச்சிகரமான — சிந்தனையைத் தூண்டும் ஊர்திகள் யாழ். நகரை வந்தடைந்தன.

அந்த ஊர்திகளுக்கு இடையில் ஓர் 'உயர்ந்த மனிதனும்' காணப்பட்டார் அந்த மனிதனின் உயரம் 10 அடி.

என்ன அதிசயப்படுகிறீர்களா? அந்த உயர்ந்த மனிதர் கால்களில் கட்டைகளை கட்டியிருந்தார்.

உயர்ந்த மனிதர் கம்பீரமாக நடந்து செல்வதை படத்தில் காணலாம். (ஒ)

## பத்திரிகையாளருடன் மாத்தயா சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் பத்திரிகையாளர்களை நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) சந்தித்து உரையாற்றினார்.

திரு. மகேந்திரராசாவுடன், முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்தில்

## பொலீஸுக்கு ஆள் திரட்டல்; விண்ணப்பம் ஏற்பது நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்டத்தில் பொலிஸ்படைக்கு ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்பது நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில்கடந்த 20ஆம் திகதி முதல் நடைபெற்றுவந்த றிசேவ் பொலீஸ் படைக்கு ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் பூர்த்தியடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பம் ஏற்பது நேற்றுடன் நிறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சஞ்சிகை விற்பனையாளருக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு தாதிமார் (Nurses) தேவை உடன் தொடர்பு கொள்ளவும். திருமதி. ரஞ்சினி பராராஜசேகரன்9/8 4ம் குறுக்கு வீதி, (வேம்படிவீதி)யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம் 1 மணி—3½ மணிவரை. (13008)

### மொழி பெயர்ப்பாளர் தேவை

உத்தரவு பெற்ற தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர் யாழ் நகரில் அமைந்துள்ள நிறுவனத்துக்குத் தேவை. தகுதியுள்ளவர் 14. 5. 90க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 683 C/o உதயன். (3411)

### ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பெண் ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை. சிறந்த ஆங்கில அறிவும் குறைந்தது 2 வருட அனுபவமும் உள்ளவர்கள் 14 5. 1990க்கு முன் விண்ணப்பிக்கவும். இல:- 682 C/o உதயன். (3410)

### சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா ருடே, FRONT LINE, SPORT STAR, ஞானபூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No!165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/4343)

### தவறி விட்டது

30-1-90 சபால் புகையிரத வண்டியில் மீசாலையில் குடும்ப அல்பம் அடங்கிய பார்சல்ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தி. கனகலிங்கம் அரசடி, சுதுமலை கிழக்கு. மானிப்பாயில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12979)

### கல்வி

கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் 5. 5. 90 (சனி) தொடக்கம் முழு நேர வகுப்புகளாக நடைபெறும். S. ஜெயராஜா, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். (3419)

### பயிற்சிகள்

தொழில்நுட்ப அறிவை பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் குறுகிய காலத்தில் சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் பெறுமதியான சான்றிதழும் வழங்கப்படும். Radio T.V. Deck, Airconditioning Refrigeration, வயறிங் வெல்டிங், வைண்டிங் SpokenEnglish Typing ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (13006)


## புதிய பெயர்

ஒட்டுசுட்டான், மே 03

முன்னாள் பிரதி விவசாயப் பணிப்பாளராகவும் முத்து ஐயன் கட்டு திட்ட முகாமையாளராகவும் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. எஸ். [illegible]ரத்தினத்தின் பெயர் முத்து ஐயன் கட்டு திட்ட இடதுகரையில் உள்ள ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு சூட்டப்பட்டுள்ளது (இ-113)



திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். தயந்த விஜயசேகரா கடந்த சனிக்கிழமை கொக்குவில் பிராந்திய அலுவலகத்துக்குச் சென்றார். அவ்வேளை திறந்த பல்கலைக்கழகத்திற்காக கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி சுவீகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அச் சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். (உ)

# பெற்றுக் கொண்ட வீரசுதந்திரத்தை

## கற்றுக் கொண்ட பாடம்மூலம் காப்போம்!

### உத்தமன் சிலை திறப்பு விழாவில் ஆஞ்சநேயர் உரை

சுன்னாகம், மே. 03

எமது விடுதலைப் போராட்டத்தை தொடராதிருந்தால். எமது கலை, கலாச்சாரம், பண்பாடு பூண்டோடு அழிந்திருக்கும். எமது போராளிகள் சிந்திய குருதியிலே நாம் இன்று சுதந்திர மூச்சு விடுகிறோம். பெற்றுக் கொண்ட வீரசுதந்திரத்தை கற்றுக் கொண்ட பாடங்கள் மூலம் காப்பாற்றுவோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீர மரணமெய்திய கைதடி விடுதலைப் புலிகளின் முன்னாள் பொறுப்பாளர்லெப்டினன்ட் உத்தமனின் சிலைத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

மேற்படி விழா ஏழாலை மேற்கு கேணியடிச் சந்தியில் திரு. பா. ஞானபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து பேசுகையில் ஆஞ்சநேயர் கூறியதாவது:-

எமது விடுதலைப் போராட்டத்தை வீர உணர்வோடு நடத்தாதிருந்தால் எமது மக்கள் தமது கலை கலாச்சாரத்தை இழந்து பௌத்தர்களாக மாறும் நிலை ஏற்பட்டிருக்கும்.

எம் இனத்தை அழிப்பதற்காகவும், எமது நாட்டை அடிமை கொள்வதற்காகவும், நடந்த போரில் நாம் முனைப்புடன் போரிட்டு வெற்றி பெற்றுள்ளோம். நாம் பெற்றுக் கொண்ட சுதந்திர உணர்வை மேலும் வளப்படுத்துவதே மறைந்த தியாகிகளுக்கு நாம் செய்யும் அஞ்சலி ஆகும்.

இப்படி அவர் கூறினார்.

தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில் அந்நியப்படையோடு நடைபெற்ற போரில் 1357 போராளிகளும் சுமார் 25 ஆயிரம் தமிழ்ப் பொதுமக்களும் இறந்தனர். இப்பொது மக்களில் சுமார் ஐயாயிரம் பேர் இளைஞர்கள். இவ் விளைஞர்கள் போராடாது, அன்னியப் படையின் கோரத்தாக்குதலுக்கு வீணே பலியானவர்கள். இந்த இளைஞர்களும் எமது போரில் இணைந்து போரிட்டிருந்தால் எமக்கு தமிழீழம் என்றோ கிடைத்திருக்கும். ஆகையால் இளைஞர்கள் வேறுபாடுகளை மறந்து எம்மோடு இணைந்து போரிட்டு சுதந்திர தமிழீழத்தை மலரச் செய்ய வேண்டும் - என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. க. செல்வநாயகம் திரு. இராசநாயகம் மற்றும் ஏழாலை மேற்கு கிராம சேவையாளர் திரு. சி. சக்திவர்மன், கவிஞர் க. பொ. நடனசிகாமணி, திரு. மகாதேவன், திரு. நாவேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

விழாவில் உத்தமனின் சிலையை அவரது தந்தை திரு. வ. பூதப்பிள்ளை திரை நீக்கம் செய்து வைத்தார்.

நடைபெற்ற போரில் உயிர் நீத்த ஏழாலையைச் சேர்ந்த வீர இளைஞர்களின் உருவப் படமும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

விழாவில் விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவின் கலை நிகழ்ச்சிகளும் கவியரங்கும் நடைபெற்றன. (உ)


## 150 இரும்பு கதிரைகள் கொள்வனவுக்கான கூறுவிலை

எமது சங்க தேவைக்கு 150 இரும்புக் கதிரைகள் தேவையாக உள்ளமையால் விலைப்பட்டியலையும், கதிரைகளின் மாதிரி படத்தையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதன் உயரம், அகலம், பாவிக்கப்பட்ட பொருள் விபரம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

10. 05. 1990 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்

பொது முகாமையாளர்-

புலோலி ப.நோ.கூ. சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (சி-4485)

## Immediate Vacancy in LIBYA

**Surveyors**

(Wide experience in Road Works, capable of working alone, masters of all surveying instruments. surveying theory, procedures and calculation methods.)

**Conditions of Service:-**

Age 30 — 55 years. Two years contract. Mess facilities, lodging, medical free. Departure within a month. Have to work in the desert. If work is found unsuitable, will be repatriated.

Please call over immediately at 18 1/4, Mudalighe Mawatte.

(off York Street) with documents. Urgent. (within two days)

Branch:

INDRANEE AGENCY
Nelliyady, Karaveddy.

Licence No:- 616 (13395)


# தமிழ் கலாசாரத்துக்கு அமைய எம் சீருடைகள் இருக்க வேண்டும்

காங்கேசன்துறை மே. 3

தமிழ்க்கலாசாரத்தைப் பாதுகாக்கத்தக்க வகையில் எம் சீருடைகள் அமைய வேண்டும். அரைகுறை, நவீன சீருடைகள் அணிவதன் மூலம் எம் கலாசார சீரழிவை நாம் எதிர்நோக்க வேண்டி வரும்''

இப்படிக் கூறினார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க 25 ஆவது ஆண்டு வெள்ளி விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் வைபவம் நடைபெற்றது-

விழாவில் சுவாமிகள் வெள்ளிவிழா ஞாபகார்த்த சால்வையை வெளியிட்டு வைத்தார்.

சுவாமிகள் மேலும் கூறியதாவது.

இந்தக்கழகம் வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது என்றால் சங்கத்துக்கு மட்டுமல்ல இளைஞர் சமுதாயத்துக்கே வெள்ளிவிழாவாகின்றது. வருங்கால சமுதாயமாக விளங்கப்போகும் இளைஞர்கள் இன்று சமய வாழ்வில் நாட்டம் கொள்ள வேண்டும்.

இன்றுள்ள இளம் சமுதாயத்துக்கு பெரியவர்கள் பயப்படும் நிலை உள்ளது. அந்நிலை மாற வேண்டும்'

இப்படி அவர் கூறினார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது:-

இளைஞர்களிடையே ஆலய வழிபாடு அருகி வருகிறது. இந் நிலை மாறவேண்டியது அவசியம் உலகில் பல பாகங்களிலும் வாழும் சைவர்கள் இந்தக் கழகத்தில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். இச் சங்கம் பெரும்பணி செய்து நிற்கிறது. ஆலயத்துடன் இணைந்து சமயப் பணியாற்றிய இச்சங்கம் மேலும் வளர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. சிவமகாராசா பேசுகையில்,

சமயப் பண்பாடு, ஒழுக்கம் உள்ள ஒரு சமூகம் உருவாக வேண்டும் இல்லையேல் சமுதாய சீரழிவைத்தான் எதிர்கொள்ளவேண்டி வரும் என்றார்.

திரு. நம. சிவப்பிரகாசம், திரு. க. கனகராசா, வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர்திரு.வை.இராசையா, இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. தனபாலன், திரு. ம. சி சிதம்பரப்பிள்ளை ஆகியோரும்உரையாற்றினார்கள்.

வெள்ளி விழா மலரை சிவத்தமிழ்ச் செல்வி வெளியிட்டு வைத்தார். (இ-68)

## சுருக்கெழுத்து அறிவுப் போட்டி

பருத்தித்துறை, மே 03

ஈழத்து. தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை திரு. சி. இராமலிங்கத்தின் முதலாவது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு வடமராட்சி சுருக்கெழுத்து கழகம் தமிழ் சுருக்கெழுத்து அறிவுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வேலணை நற்சமூக நிலையம், கோப்பாய் நற்சமூக நிலையம் என்பன பங்குபற்றவுள்ளன. (ஓ-118)

## முதலாம் ஆண்டு அனுமதி

# பெற்றோர் சத்தியக்கடதாசி சமர்ப்பிப்பது அவசியம்!

கொழும்பு, மே 3

பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கும் பெற்றோர் தாங்கள் சமர்ப்பிக்கும் தகவல்கள் சரியானவை என்பதை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இத் தீர்மானத்தை எடுத்திருப்பதாக அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

முதலாண்டு அனுமதியில் அநீதி மற்றும் முறைகேடுகள் இடம் பெறுவதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அப்பேச்சாளர் சொன்னார்.

பொய்யான பிறப்புச் சான்றிதழ் மற்றும் தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பித்து சில பெற்றோர் அனுமதி பெறுவதற்காக அமைச்சுக்கு ஏற்கனவே முறைப்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தன.

# சைவம் - தமிழ் வளர்த்தவர்

## நினைவு விழாவில் உரை

மாங்குளம், மே 03

''சதாவதானி கதிரவேற்பிள்ளை நாவன்மை உடையவர். அவர் சிறந்த கருத்துக்களுடன் பல நூல்களை ஆழமாக எழுதியவர். அவர் பேச்சாலும் செயலாலும் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்''


புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் கதிரவேற்பிள்ளையின் 83 ஆவது நினைவு விழா சட்டத்தரணி திரு. செ. கணேசராசா தலைமையில் நடந்த போது பருத் [illegible] அதிகாரி திரு. எஸ். கதிர வேற்பிள்ளை இவ்வாறு கூறினார்.

தலைவர் திரு. செ. கணேசராசா தனது உரையில், தமிழ் நாட்டில் எமது மண்ணின் பெருமையை சிறப்பித்தவர் சதாவதானி கதிரவேற்பிள்ளை என்றார்.

நினைவுவிழாவில்நெல்லை. க. பேரன், திரு. கு. இராஜகுலேந்திரா, செல்வி. கனிமொழி கதிரவேற்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

பிரதம விருந்தினரான மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (இ - 94)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிவநாதன் சுரேஷ்

தோற்றம்: 12 - 12 - 1958 மறைவு: 20 - 03 - 1990

திரைகடல் ஓடியும் திரவியம் தேட, கரை பல கடந்து வெளிநாடு சென்றீர். அங்கு ஆறாத்துயரினிலே எம்மை ஆழ்த்தி, மாறாத நினைவுடனே மண்தனிலே விட்டுவிட்டு, பாதி வழியினிலே காலன் கவர்ந்தானோ? நாளென்ன, பொழுதென்ன உம் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால்வாடும்:
மனைவி, மகன், தாய், சகோதர, சகோதரிகள்.

''சிவபதி வாசம்''
இடைக்காடு,
அச்சுவேலி. [13011]

## 61ஆம் நாள் நினைவஞ்சலி
(03 — 05 — 1990)



செல்வி
தாட்சாயிணி திருநாவுக்கரசு
[வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி]

மலர்வு: 02 - 07 - 1970 உதிர்வு: 04 - 03 - 1990

குடும்பத்தின் முதல் மகளாய்ப் பிறந்து குலத்திற்கு ஒளி விளக்காய் திகழ்ந்து பாரினில் பல்கலைக்கழக பட்டம் பெற்று புகழ் ஏணியில் ஏற முன் மரணம், விதியென்ற பெயரில் காலம் செய்த சதியா? மகளே! விடைகாண இயலாது தவிக்கின்றன எம் இதயங்கள் நீ மீளாய்த்துயில் கொண்டு விட்டாய்! ஆனால் எம்மால் துயில் கொள்ள இயலவில்லை. உனது திடீர் மறைவு எம் இதயங்களில் ஏற்படுத்தி விட்ட காயம் என்றுமே ஆறாது. பாவிகள் நாம் நீ எம்முடன் வாழ்கிறாய் என்ற மனத்தோற்றத்துடன் உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உனது மறைவை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும்.

அப்பா, அம்மா, சகோதரிமார்,
பெரியப்பா குடும்பத்தினர்.
சித்தப்பா குடும்பம்,
மாமாமார் குடும்பங்கள்.

டச்சுறோட்,
உடுவில் மேற்கு,
சுன்னாகம். [3378]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்

**பொருள்:**
மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தாற் போன்றதாகும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
03 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## உலகுக்கு ஒரு சவால்

உலகில் ஆண்டு தோறும் சுமார் 1 கோடி குழந்தைகள் வயிற்றோட்டம், நிமோனியா போன்ற நோய்களினால் மரணம் அடைகின்றனர். போதிய மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டிருந்தால் இக்குழந்தைகளில் பெரும்பாலானவற்றைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் உலகில் பல்வேறு நாடுகளிலும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் மற்றும் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளிலும் பரந்த அளவில் ஈடுபட்டு வருகிறது. பெரியம்மை போன்ற பயங்கர தொற்று நோய்களில் இருந்து உலகைக் காப்பாற்றிய பெருமை உலக சுகாதார ஸ்தாபனத்தையே சாரும். அத்துடன் இதன் பணிகளுக்காக ஆண்டுதோறும் கோடிக் கணக்கான டாலர்கள் செலவிடப்படுகின்றன.

அப்படி இருந்தும் ஆண்டு தோறும் ஒரு கோடி குழந்தைகள் மரணம் அடைவது உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு மட்டும் அல்ல முழு உலக சமூகத்துக்கும் ஒரு சவால் ஆகும்.

குழந்தை மரணங்கள் பெரும்பாலும் வளர்முகநாடுகளிலேயே அதிகரித்து வருகின்றன. பின்தங்கிய ஆபிரிக்க நாடுகளில் இது பெரும் அளவு காணப்படுகின்றது.

கல்வி அறிவு இல்லாமை, மருத்துவ வசதிகள் பற்றாக்குறை ஆகியவை குழந்தை மரணங்கள், அதிகரிக்கக் காரணம்.

இலங்கையும் வளர்முக நாடுகள் பட்டியலில் இருந்து வருகின்றபோதிலும் சில வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சுகாதார சேவைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன.

எனினும் கடந்த காலங்களில் இடம் பெற்ற வன்செயல்களினால் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குழந்தைகள் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. வடக்கு - கிழக்கில் சுமார் 50 ஆயிரம் குழந்தைகள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று ஏற்கனவே மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஆகவே உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியுடன் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குழந்தை பராமரிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டும். ஏற்கனவே சிறுவர் பாதுகாப்பு நிதியம், ரெட்பானா, சர்வோதயம், போருட், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் இத்துறையில் பெரும் பங்காற்றி வருகின்றன. யாழ். பல்கலைக்கழக வைத்திய பீட சமூகவியல் பிரிவும் கிராமங்கள் தோறும் பாதிக்கப்பட்டோர் விபரங்களை — முக்கியமாக பாதிக்கப்பட்ட சிறுவர் பற்றிய விபரங்களை சேகரித்து வருகிறது.

இந்தச் சேவைகள் மேலும் தொடர வேண்டும். ஏனைய நாடுகளில் நிலவும் பயங்கர நிலை இங்கும் உருவாகக் கூடாது.

கல்முனை ஸாஹிராவில்

## தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

அம்பாறை, மே 3

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் இந்த வருடத்திற்கான தொழில் நுட்பப்பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மோட்டார் எந்திரவியல், சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்) வீட்டுமின்மின் உபகரணம் திருத்துதல், சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ்) ஆகிய பயிற்சி நெறிகளே நடத்தப்படவுள்ளன.

பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றும் எட்டுமாதகாலத்திற்கு நடைபெறுமென கல்லூரி தொழில்நுட்பப் பொறுப்பாசிரியர் ஜனாப். இஸ்ட்காலித் தெரிவித்தார்.

மே மாத மத்தியில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (க - 14)

உத்தரவு பெற்ற

## படவரைஞர் பரீட்சை ஜூலையில் நடைபெறும்

சேமமடு மே 2

உத்தரவு பெற்ற படவரைஞருக்கான பரீட்சை ஒன்றை நடாத்துவதற்கு நில அளவைத் திணைக்களம் முன்வந்துள்ளது. இப் பரீட்சை நில அளவைத் திணைக்களத்தால் ஜூலை மாதம் நடத்தப்பட்டது.

இது சம்பந்தமான மேலதிக அறிவுறுத்தல்கள் 12- 4 - 90 ஆம்திகதி வர்த்தகமானியில் காணப்படுகின்றன. (க-37)

## வீதி திருத்தப்படுகிறது

சுழிபுரம் - பறாளை வீதியை செப்பனவு செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

வீதியை பறாளை முருகன் கோவில் கொடியேற்ற திருவிழாவிற்கு முன்னதாக திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் வீதி சுமார் ஒரு மைல் தூரம் வரை திருத்தப்படவுள்ளது. (இ-28)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 3

கலாகேசரி ஆ. தம்பித்துரை எழுதிய "பண்பாட்டின் மூன்று கோலங்கள்" என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 6 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்க மண்டபத்தில் நடைபெறும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரையின் 58 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழா திரு ஏ. ரி. பொன்னுத்துரையின் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் நூலை வெளியிட்டு வைப்பார். (உ - 7)

மாதம் ஒரு நாள் அல்லது இரு நாட்கள்

## பாடசாலைகளில் பெற்றோர் தினம் அனுஷ்டிக்க பணிப்பு

யாழ்ப்பாணம் மே 3

மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு நாளை பெற்றோர் தினமாக நடைமுறைப்படுத்துமாறு கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சுற்று நிருபம் மூலம் சகல பாடசாலை அதிபர்களையும் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட நாளைத் தெரிந்து அந்தத் தினத்தில் பெற்றோர்களை அழைத்து மாணவர்களின் செயற்பாடுகளை அவர்களுக்கு விளக்க வேண்டும். பெற்றோரை அழைக்கும் தினத்தை கல்வி திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். இதனால் கல்வி அதிகாரி ஒருவரும் அந்தக் கலந்துரையாடலில் சமுகமளிக்க முடியும்.

இப்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ். வந்துள்ள டென்மார்க்குழு பல இடங்களுக்கும் விஜயம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். வந்துள்ள டென்மார்க் பொறியியலாளர் குழு யாழ் - மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு சுவீடன் அரசால் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய தொலைத் தொடர்பு சேவைகள் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவே இந்தக் குழு வந்துள்ளது.

'கால் புறோ இன்ரநஷனல்' என்னும் டென்மார்க் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. ஜான் லாங்கர் தலைமையில் வந்துள்ள இந்தக் குழுவில் வெளியிணைப்பு வேலைகளுக்கு பொறுப்பாக திரு. ஜேக்ஸ்கப்சனும், சுவிச் போர்ட் வேலைகளுக்கு பொறுப்பாக புறோடிர்சனும் அங்கம் வகிக்கின்றனர்.

ஒரு வாரத்துக்கு மேலாக இங்கு தங்கும் இவர்கள் தொலைத்தொடர்பு வேலைகள் சம்பந்தமான மதிப்பீடுகளை மேற்கொள்வார்கள்.

இவர்களை வடக்கு-கிழக்கு மாகாண தொலைத் தொடர்பு பொறியியலாளர் திரு. எஸ். கனகசூரியரும், திட்டமிடல் பொறியியலாளர் திரு. ஞானானந்தனும் பல இடங்களுக்கும் இன்று அழைத்துச் செல்வார்கள். (இ-3)

## நாடுதிரும்பினார்

யாழ்ப்பாணம், மே 3

தொலைத் தொடர்புத் துறையில் உயர்கல்வி பெற ஜப்பானுக்குச்சென்றவடக்கு-கிழக்கு தொலைத் தொடர்பு மாகாணப் பொறியியலாளர் திரு. கனகசூரியர் நேற்று முன் தினம் நாடு திரும்பினார். (இ-3)

## கால்நடை வளர்க்க கடன்

கால்நடைவளர்ப் போர் சங்க உறுப்பினர்கள் கறவை மாடு, ஆடு வாங்கி சுய தொழில் மேற்கொள்ள 5000 ரூபாவுக்கு குறையாத கடன் வழங்க யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது. (க-120)

பட்டப் பின்படிப்பு டிப்ளோமா:

## ஆசிரியருக்கான தடைநீக்கம்

யாழ்ப்பாணம் மே 3

பட்டப்படிப்பின் படிப்பு டிப்ளோமா முழுநேர நெறியை பல்கலைக்கழகத்தில் பெறுவதற்கு ஆசிரியர்களுக்கு இருந்துவந்ததடை நீங்கியது.

யாழ்- பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் அரசாங்க பாடசாலை பட்டதாரி ஆசிரியர்கள் 75பேருக்கும், தனியார் பாடசாலை பட்டதாரி ஆசிரியர்கள் 25 பேருக்கும் இந்த நெறியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவர்களில் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடியலீவை வழங்க கல்வி அமைச்சு மறுத்து வந்ததால், அவர்கள் பகுதி நேரமாக இருவருடப் பயிற்சி பெற வேண்டிய நிலை இருந்து வந்தது.

அடுத்த வருடம் முதல் இந்த பயிற்சிக்கு செல்லும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் லீவு வழங்கப்பட இருக்கிறது, இதனால் முழு நேரப்பயிற்சியில் தனியார் பாடசாலை ஆசிரியர்களுடன் இவர்கள் சேர்க்கப்படஇருப்பதால், பயிற்சிக்காலம் ஒரு வருடமாக குறைக்கப்படுகிறது. (இ - 3)

## பலியானவர் மட்டக்களப்பு வாலிபர்!

கொழும்பு, மே 3

கொழும்பு கொட்டாஞ்சேனையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பகீரதன் என்ற வாலிபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுறது. அவருக்கு வயது 26.

இவர் "ரெலோ" இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும்—

நாட்டு சூழ் நிலையைக் கருதி அவர் வெளிநாடு போக முயற்சித்தார் என்றும் கூறப்படுகிறது. (உ)

## தொழிற்சங்கவாதி அசீஸ் துணிச்சல் மிக்க வீரர்

ஈழவர்ஜனநாயகமுன்னணி அஞ்சலி

யாழ்ப்பாணம் மே 3

"ஜனாப் அசீஸ் அவர்கள் தொடர்ச்சியாக மலையகத் தமிழ் பேசும் மக்களுக்காக மேற்கொண்ட போராட்டங்களாலும், சர்வதேசத் தொழிற் சங்க மாநாடுகளில் மலையகத் தமிழ் பேசும் மக்களின் அவல நிலையை எடுத்துரைத்தமையாலும் மலையகத் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் முற்போக்காளர் துணிச்சல் மிக்க வீரர் என்று பெயர் பெற்றார்."

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவரும் தொழிற் சங்க வாதியுமான ஜனாப் ஏ. அசீஸ் மறைவை ஒட்டி ஈழவர் ஜனநாயக முன்னணி வெளியிட்ட அஞ்சலிச் செய்தியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அஞ்சலிச் செய்தி மேலும் கூறுவதாவது: "அண்மைக் காலத்தில் ஜனாப் அசீஸ் பொதுவான நிலைப்பாடு ஒன்றை எடுத்து மலையகத் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகப் பல முயற்சிகளை மேற் கொண்டார். அதற்கமைய ஈழவர் ஜனநாயக முன்னணியோடு அவர் வைத்த தொடர்புகளுக்கும், நல்கிய ஆலோசனைகளுக்கும் நன்றி உடையவர்களாக உள்ளோம்.

கடந்த 50 ஆண்டுகளாக ஓர் சிறந்த தொழிற் சங்கவாதியாகத் திகழ்ந்த ஜனாப் ஏ. அசீஸ் அவர்களது மறைவால் வாடி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்." (க)

வெளிநாடு செல்லும் வைத்திய அதிகாரிகள்

## 2 வாரங்களுக்கு முன்னரேயே லீவுக்குவிண்ணப்பிக்கவேண்டும்

கொழும்பு மே 3

வெளிநாடுகளுக்கு உத்தியோக பூர்வ அல்லது தனிப்பட்ட விஜயம் மேற் கொண்டு செல்லவுள்ள வைத்திய அதிகாரிகள், பயணமாவதற்கு இரண்டு வாரங்கள் முன்பதாகவே லீவு கோரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சுகாதார அமைச்சு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

இதற்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் அமைச்சு விடுத்துள்ள சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## பளை மக்கள் வங்கிக்கிளை மீண்டும் விரைவில் திறக்கப்படும்

கிளிநொச்சி மே 3

பளையில் நீண்டகாலமாக மூடப் பட்டு இருக்கும் மக்கள் வங்கிக் கிளையினை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மேற் கொண்டு உள்ளார்.

வங்கியினை உடனடியாக திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தீர்மானம் அண்மையில் கிளிநொச்சி கச்சேரியில் அரசாங்க அதிபருக்கும், வங்கி உயர் அதிகாரிகளுக்கும், உதவி அரசாங்க அதிபர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்டது (இ - 76)

## கண்டதும் கேட்டதும்

தனது பிள்ளைக்கு டாக்டரால் கொடுக்கப்பட்ட மருந்துப் போத்தலில் எழுதியிருந்ததை தாயாரால் வாசிக்க முடியவில்லை. அவர் கல்வி அறிவற்றவர். இதனால் அவர் தவறாக மருந்தைக் கொடுத்து அந்தக் குழந்தைக்கு மரண அபாயத்தை ஏற்படுத்தினார். இந்தச் சம்பவம் எதியோப்பியாவில் நடைபெற்றது.

அமெரிக்காவில் ஒரு தொழிலாளிக்கு எழுத வாசிக்கத் தெரியாது. அவர் நச்சுப் பொருள் பொதி ஒன்றை போஷாக்குப் பொருள் என்று கருதி மந்தைகளுக்கு அதைக் கொடுத்தார். அவ்வளவு மந்தைகளும் இறந்து விட்டன.

இந்தியாவில் ஒரு விவசாயிக்கு எழுத வாசிக்கத் தெரியாது. கைப்பெருவிரல் அடையாளம் இட்டுத்தான் கையெழுத்து வைப்பார். இந்த அறிவின்மையைப் பயன்படுத்தி அவருடைய பூர்வீகக் காணிகளை மற்றவர்கள் பறித்தெடுத்தனர்.

உலகத்தில் இப்படி இலட்சக் கணக்கான கதைகள் உண்டு.

உலக மக்கள் தொகையில் கால்வாசிப் பேர் கல்வி அறிவு அற்றவர்கள். இதில் 90 சதவீதத்தினர் வளரும் நாடுகளில் வாழ்கின்றார்கள். ஆனால் வளர்ந்த தொழிற்துறைமயமாகிய நாடுகளிலும் கல்வி அறிவின்மை நிலவுகின்றது.

கல்வி அறிவின்மையைப் பற்றி திருவள்ளுவர் குறள் ஒன்றை எழுதியுள்ளார்.

"கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

கற்றவரே கண் உடையவர்கள். கற்காதவர்கள் முகத்தில் புண்தான் உடையவர்கள்

கல்வியின் தேவையை வள்ளுவப் பெருந்தகை எவ்வளவு அற்புதமாகக் கூறியிருக்கிறார்.

செல்வேலவன்

## தனியார் பஸ்களில் சீசன்டிக்கெட்

கொழும்பு, மே 2

நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு தனியார் பஸ்களில் சீசன் டிக்கட் வழங்க தனியார் போக்குவரத்துச்சபை தீர்மானித்துள்ளது.

மாணவர்களின் பாதாந்தப் பயணச்செலவில் இருந்து 15 சதவீதக் கழிவுடன் சீசன்டிக்கெட் வழங்கப்படும் என்று தனியார் போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டபிள்யூ. டி. ஜே. கருணானந்த தெரிவித்தார்.

சகல மாவட்டங்களிலும் உள்ள தனியார் போக்குவரத்துச் சபைகளுக்கு இந்த நடைமுறையைப் பின்பற்றும்படி திரு கருணானந்த ஆலோசனை வழங்கியிருக்கின்றார். (இ-எ)

## மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம். மே 03

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 5 ஆம் திகதி சனிக்கிழமை கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு மணவாளக் கோலத் திருவிழா நடைபெறும். (க-07)

## செய்திக்கொத்து

### நூல்கள் தேவை

கொழும்புத்துறை மே 3

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழக நூல் நிலையத்துக்கு சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் நூல்கள் தேவைப்படுகின்றன என மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் திரு. வ. அருணோதயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். ( -30)

### வை. எம். சி. ஏ பொதுச்செயலாளர்

கொழும்புத்துறை மே 3

நவாலி வை எம். சி ஏ யின் 99 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான பொதுச் செயலாளராக திரு. என் அன்புராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (-30)

### கசிப்பு

பண்டத்தரிப்பு மே 3

கசிப்புஒழிப்பில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவதை அடுத்து பல இடங்களில் கசிப்பு விற்பனை மறைந்து வருகிறது. (இ-120)

### சமாதி அடைந்தார்

யாழ்ப்பாணம் மே 3

காஞ்சிபுரம் தொண்டமண்டலம் மெய்கண்டார் ஆதீனக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய ரீடம் தம்பிரான் சுவாமிகளாகத் தீட்சை பெற்ற காரைநகரைச் சேர்ந்த தொண்டர் அருளம்பலம் சுவாமிகள் கீரிமலையில் சமாதிப் பேறு அடைந்தார்.

அவரின் மறைவை ஒட்டி யாழ்ப்பாணம் சித்தாந்த சைவப் பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள செய்தியில், "வேதாந்த சித்தாந்த மறைஞானத்தைப் பரப்புவதில் சுவாமிகள் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது" என்று கூறப்பட்டுள்ளது. (க)

### பொலிகண்டியில் மாவீரர் நினைவு

யாழ்ப்பாணம் மே 3

தியாக மரணம் எய்திய வீர வேங்கைகளை நினைவு கூரும் நோக்கில் பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் அண்மையில் விளையாட்டு, கலைவிழா நிகழ்ச்சிகளை நடத்தியது.

திரு. இ. செல்வகணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டத்தளபதி பானு வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை, மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் குணம் வேங்கைகள் டேவிட், ஜெராட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப - 160)

### நாவற்குழி பாடசாலை

யாழ்ப்பாணம் மே 3

யாழ்ப்பாணம் கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது நாவற்குழி மகாவித்தியாலயம் அநேக நிகழ்ச்சிகளில் முன்னணியில் நின்று வெற்றியீட்டியது. (ப - 30)

## வாசகர் திருமுகம்

### அதிகாரிகளின் கவனத்திற்கு

அடிக்கடி ஏற்படும் மின் தடையால் நீர்வேலிப்பகுதித் தொழிற்சாலைகள் உற்பத்தியை இடைநிறுத்த வேண்டிய நிலையில் இருந்துவருகிறது.

கோப்பாய் - கைதடி வெளியில் இயங்கிவரும் கல்லுடைக்கும் கிறசர்களும் மின்தடைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இவற்றிலிருந்து எழும் தூசி இவ் வெளியினூடாகச் செல்லும் மின்இணைப்புகளில் சேருவதனால் மின் தடை ஏற்படுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?

விக்னேஸ்,
கோப்பாய்.

### முல்லைத்தீவு கல்வித் திணைக்களம்

முல்லைத் தீவு கல்வித் திணைக்களத்தில் கடமை புரியும் சில முக்கிய அதிகாரிகள், ஆசிரியர்களையோ ஏனைய பொதுமக்களையோ, மதித்துப் பேசுவதில்லை. இதனால் சில ஆசிரியர்கள், நீண்ட தூரங்களிலிருந்து சென்றும், தமது வேலைகளைச் செய்து முடிக்காமல் அழுகையுடன் திரும்புவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதில் சில விடயங்கள் கல்விப் பணிப்பாளருக்கே தெரிவதில்லை. தெரிந்தாலும் சில அதிகாரிகள் பணிப்பாளருடைய கட்டளைகளை ஏற்பதாகத் தெரியவும் இல்லை. இந்த அவல நிலை தீர தற்போது பொறுப்பில் இருப்பவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து ஆசிரியர்களின் அவலங்களைத் தீர்த்து வைக்க வேண்டும்.

அத்தோடு சில மாதங்களாக ஆசிரியர்களுக்குரிய சம்பளப் பணமும் குறிப்பிட்ட தினத்தில் வழங்கப்படுவதில்லை.

சுதன்
முல்லைத்திவு

### விதைகிழங்கு

கொழும்புத்துறை மே 3

வழமைபோல் இவ் வருடமும் நல்லின விதை உருளைக் கிழங்கை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கு யாழ். கமத்தொழில் சேவைத் திணைக்களம் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-30)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தென் இந்திய திருச்சபை
யாழ்ப்பாணம் ஆதீனம்
மாங்குளம் திருச்சபை

## தொழிற் பயிற்சி நிலையம்

## பதவி வெற்றிடம்

தென் இந்திய திருச்சபையின் மாங்குளம் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, சுருக்கெழுத்து போதிக்கும் ஆசிரியர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

வயது எல்லை கிடையாது.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்குமிட வசதி உண்டு.

விண்ணப்பங்கள்:

முகாமையாளர்,
தொழிற் பயிற்சி நிலையம்,
தென் இந்திய திருச்சபை,
மாங்குளம்.

என்ற விலாசத்திற்கு 10 - 05 - 1990 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.

அருட்திரு. டி. எஸ். தியாகராஜா,
முகாமையாளர்.

தென் இந்திய திருச்சபை,
மாங்குளம்.
1990. 04. 28 (3392)


# பர்மாவில் மனித உரிமை மீறல்; மன்னிப்புச்சபை பலத்த கண்டனம்!

லண்டன் மே 2

மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் பர்மாவில் இடம் பெறுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பர்மாவில் இராணுவச்சதி ஒன்று மேற்கொள்ளப்பட்டது; அதன் பின்னர் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு, அரசியல் கைதிகள் என்று காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரசியல் கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப் படுவதாகத் தகவல் கிடைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை நேற்று லண்டனில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அடிப்பது, மின்சார அதிர்ச்சி கொடுப்பது, கிரவல் கற்கள் உடைந்த கண்ணாடித் தூள்களை பரப்பி, அவற்றின் மீது முழங்கால்களால் நடக்கும்படி வற்புறுத்துவது போன்ற சித்திரவதை நடவடிக்கைளுக்கு அரசியல் கைதிகள் ஆளாக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பர்மா இராணுவத்துக்கு அடக்குமுறை அதிகாரங்கள் அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கின்றது. விசாரணையின்றி பொதுமக்களைக் கைது செய்து காவலில் வைப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் விவரித்து உள்ளது. (எ)

### விண்வெளிபயணத்தில் தெஹ்ரான் ஈடுபடும்

மாஸ்கோ மே 02

ஈரானிய விண்வெளி வீரர் ஒருவரை சோவியத் விண்கலத்தில் விண்வெளிப் பயணத்திற்கு அனுப்புவதைப் பற்றி, தெஹ்ரானில் நடைபெற்ற சோவியத்- ஈரானிய பொருளாதார ஆணைக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டு விண்வெளிப் பயணத்திற்காக, பல வெளிநாடுகள், சோவியத் நாட்டின் 'கிளாவ் காஸ்மோஸ்' என்கிற விண்வெளிப் பயண அமைப்பை அணுகியுள்ளன.

ஜப்பான்' இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுளின் விண்வெளி வீரர்கள் சோவியத் விண்வெளி வீரர்களுடன் கூட்டு விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# 10,000 சோவியத் யூதர்கள் இஸ்ரவேலில் குடியேற்றம்!

### ஒரு மாதத்தில்மட்டும்

ஜெருசலம் மே 2

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் சுமார் பத்தாயிரம் சோவியத் யூதர்கள் இஸ்ரவேலில் குடியமர்த்தப்பட்டனர்.

இவர்களில் 250 பேர் இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப் பட்ட பகுதியில் குடியமர்த் தப்பட்டனர்.

அந்த யூதர்களின் விருப்பத்தின் பேரில் இது இடம் பெற்றது.

சோவியத் யூனியனில் இருந்து குடிபெயரும் யூதர்களை ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசத்தில் குடியமர்த்தப்படுவதை பலஸ்தீன விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டித்து உள்ளது. (எ)

★ மே 20இல் நடைபெறவுள்ள

# ருமேனியா பொதுத்தேர்தல் ஒத்தி வைக்கப்படலாம்!

புக்காரெஸ்ட், மே 2

எதிர்க்கட்சிகளைச் சந்தித்துப் பேச ருமேனியா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துஉள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகதிநடைபெறவுள்ள ருமேனியாவின் முதலாவதுசுதந்திரப்பொதுத் தேர்தலை பகிஷ்கரிக்கப்போவதாக எதிர்க்கட்சிகள் பயமுறுத்தி இருக்கின்றன.

தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் கோரிக்கையாக உள்ளது.

தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக இடைக்கால அரசை நடந்தும் தேசிய மீட்பு முன்னணி கணக்கில்லாது பணத்தைச் செலவு செய்வதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி உள்ளன. [எ]

# கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பரவி வரும் பெயர்மாற்ற அலை!

பிரக், மே 2

கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கைவிட்ட கிழக்கு ஐரேப்பிய நாடுகளில் எல்லாம் பொது இடங்களுக்கு வைக்கப்பட்ட பெயர்கள் எல்லாம் மாற்றப் படுகின்றன.

செக்கோஸ்லேவேகியாவில் அதன் ஜனாதிபதியான திரு வக்லேவ் ஹேவல் இப்பெயர் மாற்றத்லை முழு மூச்சாக நின்று நடத்துகின்றார்.

கம்யூனிஸ சித்தாந்தத்தைத் தோற்றுவித்தவர்களில்ஒருவர் பிரெட்ரீச் ஏஞ்சல்ஸ் அவரது பெயர் ஜனாதிபதி ஹேவல் வசிக்கும் வீதிக்குச் சூட்டப் பட்டிருந்தன. அப்பெயர் மாற்றப்பட்டது. அந்த வீதிக்கு இப்போது அக்லஸ் ரஷின் என்பவரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது,

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரிய ஹங்கேரி ஏகாதிபத்தியத்தில் இருந்துசெக் நாட்டிற்கு சுதந்திரம் வழங்கக் கோரும் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரே அலைஸ் ரஹீன் ஆவார்.

''முக்கியமில்லாதஜேர்மன் தத்துவஞானிஒருவரின் பெயர் சூட்டப்பட்ட வீதியில் வசிப்பதை நான் விரும்பவில்லை. இந்த நாட்டை உருவாக்கிய ஒருவரின் பெயர்சூட்டப்பட்ட வீதியில் தனது வீடு இருப்பதையே விரும்புகின்றேன்''– என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பிராக் நகரமேயர் ஐரோஸ்லேவ் கொரான்கருத்து வெளியிடுகையில் '' பெருமைக்கு உரியவர்களின் பெயர்களையே வீதிகளுக்கு சூட்டும் காலம் வந்து விட்டது'' – என்று சொன்னார். (எ)

இஸ்ரவேலில்

# ஜனநாயகக் கேலிக்கூத்து; ஜனாதிபதி கண்டனம்!

டெல்அவிவ், மே 2

இஸ்ரவேலில் ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் ஜனாதிபதி ஹெய்ம் ஹெர்ஸோக் தனது சுதந்திர தின உரையில் தெரிவித்தார்.

கடந்த ஆறு வாரங்களாக புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாத நிலை இஸ்ரவேலில் நிலவிவருகின்றது.

புதிய அரசு ஒன்றை அமைப்பது சம்பந்தமான முயற்சியில் தொழிற்கட்சி தோல்வி அடைந்தது.

காபந்து அரசு நடத்தும் லிக்குவிட் கட்சியிடம் புதிய அரசு ஒன்றை அமைக்கும் பொறுப்பை ஜனாதிபதி மீண்டும் ஒப்படைத்துள்ளார்.

இந்த நிலையில்தான் ஜனாதிபதியின் கண்டனம் வெளியாகியது. தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான காலம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி ஹெர்ஸோக் சொன்னார். (எ)

### காஸ்ட்றோவுக்கு றேகன் கோரிக்கை

மியாமா, மே 2

கியூபாவில் சுதந்திரத்தேர்தலை நடத்தும் படி அமெரிக்காவின் முன்னாள் அதிபர் றேகன் வானொலி மூலம் ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோவுக்கு வேண்டுகோள் விடுத்தார்

கிழக்கு ஐரோப்பா மற்றும் லத்தீன்அமெரிக்கா நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும்படியும் ஜனாதிபதி காஸ்ட்ரோவை திரு. றேகன்கேட்டுக் கொண்டார். (எ)

# காஷ்மீரின் விடுதலைக்காக ஒன்றுபட்ட போராட்டம்!

### போராளிகுழுக்கள் இணக்கம் கண்டன

காஷ்மீரின் விடுதலைக்காகப் போராடிவரும் ஒன்பது போராளிக்குழுக்களும் கடந்த வாரம் பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத்-காஷ்மீரின் தலைநகரில் கூடி பேச்சுக்கள் நடத்தின.

இந்தியாவிற்கு எதிராக பொது இராணுவ, அரசியல் நடவடிக்கைகள் கொண்ட திட்டம் ஒன்றைத் தயாரிப்பது என்று இக்குழுக்கள் உடன்பாடு கண்டன.

ஜம்மு – காஷ்மீர் விடுதலை முன்னணியும் இந்த ஒன்பது குழுக்களில் ஒன்றாகும்.

இந்தியாவுக்கு எதிரான புனித யுத்தத்தை ஒருமுகப் படுத்தி நடத்தவே சகல போராளிகுழுக்களும் ஒன்றுபட்டுள்ளன என்று ஜம்மு – காஷ்மீர் விடுதலைமுன்னணிப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (எ)

★ ஐரோப்பிய நாடுகளில்

# நேட்டோ இராணுவ பலம் நீடிக்கும் என அமெ. அறிவிப்பு

வாஷங்டன், மே 2

ஐரோப்பாவில் நேட்டோவின்இராணுவ பலம் தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் சேனி அறிவித்தார்.

கொரியாக்களுக்குஇடையே பதற்றம் பெருகி வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என்று தான் கருதுவதாகவும் அமெரிக்கா தெரிவித்திருக்கிறது.

தென் கொரிய எல்லையில் வட கொரியா தனது ஆயுதப் படைகளை குவித்து வைத்திருப்பதாகவும் அமைச்சர் காரணம் காட்டியிருக்கிறார்.

தென்கொரிய எல்லையில் வடகொரியா ஊடுருவலை முறியடிப்பதற்காக அமெரிக்கா பத்தாயிரம் துருப்புக்களை வைத்திருக்கிறது

ஐரோப்பாவில் இன்னும் சோவியத் யூனியன் ஆதிக்க அரசியல் சக்தியாகவே இருப்பதாகவும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் சொன்னார். (எ)

### மாணவர் தலைவர் மரணம்

அஸாம் '' போடோ '' மாணவர் கிளர்ச்சித் தலைவர் உபேந்திரநாத் பிரம்மா நேற்று புதுடில்லியில் மாரடைப்பால்மரணமடைந்தார்.

அஸாம் மாநிலத்தில் 'போடோலந்து' தனிநாடு கோரி போராடிவந்த முக்கிய தலைவர்களில் இவரும் ஒருவராவார்.

இறக்கும்போது அவருக்கு வயது 30. (எ)

## 45வது நாள் நினைவஞ்சலி



விசுவநாதன் சசிக்குமார்


மண்ணில்: 07 - 04 - 1974
விண்ணில்: 20 - 03 - 1990

ஆண்டு பதினைந்தில் நீண்டு வளர்ந்த நீர்
மாண்டு போனாலும் ஈண்டு எம் மத்தியில்
சான்று பல காட்டி சகல கலை வல்லுனராய் – என்
றுன்றும் எம்முடன் வாழ்கின்றீர் சசியே
சாரணர் பயிற்சியில் திரனாயும் சகல மாணவர்க்கும்
பூரண சந்திரனாய் ஒளிர்விடும் குமாரரே – நீர்
அருமருந்தென பெருமருந்தென பெருமை கொண்டே
அருகிருந்து அன்பு கூட்டி இன்பமூட்டி
துணையாய் இருப்பீர் என துன்பம் மறந்தோம்
அணையா தீபமாய் அனைவர்
நெஞ்சிலும் உறைந்தீரே
ஓம் சாந்தி

உம் பிரிவால் வாடும்:
அன்பு பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
பிரான்ஸ் மாமன், மாமிமார், சித்தப்பா, சித்திமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். [13005]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. இராச தவநேசன்
அவர்கள்

இறைவனின் படைப்பு: 08 - 10 - 1951
அரக்கரின் அழிப்பு: 13 - 05 - 1989
திதி: 03 - 05 - 1990

நல்லவராய், வல்லவராய், இனியவராய் எம்மை வாழவைத்து விண்ணகம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! தெய்வப் பெருவாழ்வு அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவில் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய். சகோதரங்கள்.

குராவத்தை,
சுன்னாகம். (3393)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலியும் திதியும்



மருதப்பு ராஜ்குமார்
(வீரவேங்கை லெப்டினன்ட் அல்பேட்)

தாயின் மடியில்: 09 - 10 - 1970
மண்ணின் விடிவிற்காக: 14 - 04 - 1989
திதி: 03 - 05 - 1990

அன்பின் செல்வமே! மண்ணை மீட்க விண் புகுந்த வீரவேங்கையே! எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று. ராஜ்குமாரா எத்தனை ஆண்டு சென்றாலும் உன்னை மறக்க எம்மால் முடியாதையா மகனே! மறக்க நினைத்தாலும் உன் நினைவு பீறிட்டு வருகிறது. எத்தனையோ சுகபோகத்துடன் வாழ வசதி இருந்தும் யாவையும் வீசிவிட்டு தமிழீழம் காண புறப் பட்டாய். உன்கனவு நினைவாக இறைவனை வேண்டி உன்னோடு கந்தர் மடத்தடியில் உயிர்நீத்த தோழர்களுக்கும் எமது கண்ணீர்ப் புஷ்பங்களை காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

அன்பின் அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், சிறிய தகப்பன்மார்,
சிறிய தாய்மார், மைத்துனர்மார், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

மலர்மகள் வீதி,
அரியாலை. (13007)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சிவசம்பு சொர்ணம்மா

தாயின் மடியில்: 11- 02- 1911
தயாபரணடியில்: 03 - 04- 1990

அன்புக்கோர் இருப்பிடமாக, பொறுமைக்கோர் உறைவிடமாக, குடும்பத்திற்கோர் ஒளிவிளக்காக வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் விட்டுச் சென்ற உமது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மகள்: கு. சிவஈஸ்வரி,
பேரன்: கு. சிவேந்திரம்

''ஈஸ்வரிவாசா''
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில். (12978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய எமது புதிய வெளியீடு

பானுசந்தர் — சுரேஸ் — அஸ்வினி நடித்த

**போலீஸ் விசாரணை** (ஒறிஜினல்)

117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

12991

## வட இலங்கை மருத்துவ கல்லூரி மாணவர் ஒன்றிய அவசர பொதுக் கூட்டம்

இடம்:- கல்லூரி கேட்போர் கூடம்.
காலம்:- 04-05-1990 வெள்ளிக்கிழமை.
நேரம்:- காலை 10-00 மணி.

வட இலங்கை மருத்துவ கல்லூரி, மாணவர் ஒன்றியம். செயலாளர் [12988]

## அறிவித்தல்

யாழ். மாவட்ட தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர் சங்க அங்குரார்ப் பணக் கூட்டம் கடந்த 29 – 04 – 90 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இன்று நாம் எதிர்நோக்கும் தொழில் ரீதியான நெருக்கடி பற்றி ஆராயப்பட்டது. வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளதால் எமது சங்க அங்கத்துவ எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் மேற்கொண்டு புதிதாக சேரவிரும்புவோர் அங்கத்தவராக சேரும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

மு. ஜெகதீசன் (தலைவர்),
190, அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம். (13013)

## கண்ணீர் அஞ்சலி

1990-4-29ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டியில் அகால மரணமடைந்த எமது தீவகத்தைச் சேர்ந்த

**திரு. பசுபதி இரகுபதி**

(இலங்கை நிர்வாக சேவை - தலைவர், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் (12989)

மக்களை ஏமாற்றிய

## முன்னாள் கான்ஸ்டபிள் கட்டி வைக்கப்பட்டார்

திருகோணமலை, மே 3

திருகோணமலை மடத்தடிச் சந்தியில் முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமக்களின் பார்வைக்காக விடுதலைப் புலிகளினால் கட்டி வைக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி பொதுமக்களிடம் இருந்து பணம் அறவிட்டதற்காகவே இத் தண்டனை வழங்கப்பட்டது.

சுமார் மூன்று மணி நேரம் கழுத்தில் அட்டையுடன் இவர் நிறுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். (ஒ-9)

### தமிழக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்கிறார்கள்.

இந்த விஷயத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

இதனால் எங்கள் ஆட்சியே பறிபோனாலும் கவலையில்லைஏற்கனவே நெருக்கடி நிலையை எதிர்த்து ஆட்சியைப் பறிகொடுத்தவர்கள் நாங்கள். எனவே தவறுகளைச் சுட்டிக்காட்டியே தீருவோம்.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். [ஒ-எ[

### தமிழ் மொழி- -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வுகள இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் துணைக் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேசிய மட்டத்திலான தமிழ் மொழி தின போட்டிகள் ஜூன் மாதம் 15, 16 ஆம் திகதிகள் கொழும்பில் நடத்தப்பட்டு, ஜூன் 16 ஆம் திகதி மாலை தமிழ்த் தின விழா கொண்டாடப்படும் என்று துணைக்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-எ)

### நோர்வூட்டில் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு. திலக், ஜனாப் கபூர் ஆகியோரும் திரு. பாலாவும் கூட்டத்தில் உரையாற்றினர்.

கூட்டத்தில் உரையாற்றிய பலரும், தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வுகாண சகலரும் முயற்சிக்க வேண்டும் என்றும்—

மலையக மக்களை நாடு கடத்துவதை நிறுத்த வேண்டும் என்றும்—

உள்நோக்கம் கொண்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்—

மலையகத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தனியான கிராம சேவகர் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (உ)

## சந்தர்ப்பவாத சக்திகளை மக்கள் தூக்கி எறிய வேண்டும்

### பரந்தன் மே தினக் கூட்டத்தில் சந்திரன்

கிளிநொச்சி, மே 3

17 வருடங்களாக விடுதலைப் புலிகள் போராடிப் பெற்ற இந்த அமைதி நிலையைப் பயன்படுத்தி சில சந்தர்ப்பவாத சக்திகள் தம்மை வளர்க்க முற்படுகின்றன. இந்த சக்திகளை இனம் கண்டு மக்கள் தூக்கிஎறியவேண்டும்.

விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்தியப் பொறுப்பாளர் திரு. சந்திரன் பரந்தனில் நடைசெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மேதின பொதுக்கூட்டம் பரந்தன் விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. கோபி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திரு. சந்திரன் மேலும் கூறியதாவது:-

உண்மையான விடுதலைக்காகப் போராடியவர்கள் புலிகள் தான் என்பதனை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். உலகில் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய மக்கள் எல்லாம் இன்று சுதந்திரமாக வாழ்கின்றார்கள்.

ஆகவே நாமும் எம் மண்ணின் விடிவுக்காக மக்களுடன் இணைந்து தொடர்ந்து போராடுவோம்.

நாம் இன்னமும் சுதந்திரமாக வாழவில்லை. எமது போராட்டம் தனியே மண்ணின் விடுதலையை மட்டும் மையமாக கொள்ளாமல் அத்துடன் இணைத்து பெண் விடுதலை, வர்க்கபேதம், தேசிய விடுதலைபோன்றவற்றுக்காகவும் போராட வேண்டும்.

நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியவுடன் எமது தாயக உரிமைகளை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதாக எவரும்நினைக்கக்கூடாது.

நாம் எமது தாயக உரிமைக்காகவும், மண்ணின் மீட்புக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து போராடுவோம். எம்மை எவரும் அடிபணிய வைக்க முடியாது.

நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து விடுதலையை நோக்கிச் செல்வோம் — என்றார்.

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. கோபி பேசுகையில் கூறியதாவது:-

தொழிற் சங்கங்கள் இதுவரை தமிழ் ஈழ போராட்டத்துக்கு எவ்வித ஆதரவினையும் வழங்கவில்லை. அவற்றின் செயற்பாடுகள் சரியானமுறையில் அமையவில்லை. ஆதலால் நாம் எல்லா தொழிற் சங்கங்களையும் ஒரே தலைமையின் கீழ் இணைத்து வருகிறோம்.

நாம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தொழிற்சங்கத்தின் தலைமையின்கீழ் தொழிலாளர் உரிமைகளுக்காகவும், இன நலனுக்காகவும் போராடுவோம் — என்றார்.

கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு. வில்லிஸ், பரந்தன் இராசயனத் தொழிற்சாலை ஊழியர் திரு. சுந்தர்ராஜன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஒ-76)

## சந்தை விலைகள்

சுன்னாகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 10.00-12.00 | ரூ. 11.00-14.00 | ரூ. 12.00-16.00 |
| வாழைக்காய் | ரூ. 7.00- 9.00 | ரூ. 3.00- 4.50 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 10.00-12.00 | ரூ. 7.00-12.00 | ரூ: 12.00-14.00 |
| பாகற்காய் | ரூ. 11.00-12.00 | ரூ. 10.00-12 00 | ரூ: 12.00-14.00 |
| கோவா | ரூ. 11.00-13.00 | ரூ. 10.00-14.00 | ரூ. 12.00-16.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-23.00 | ரூ. 20.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 19.00-21.00 | ரூ. 20.00-23.00 | ரூ. 20.00-22.00 |
| பீற்றூட் | ரூ. 6.00- 8.00 | ரூ. 6.00- 8.00 | ரூ: 8.00-10.00 |
| பீன்ஸ் | ரூ. 18.00-20.00 | ரூ. 19.00-21.00 | ரூ. 20.00-24.00 |
| பூசணி | ரூ. 5.00- 6.00 | ரூ. 3.00- 3.50 | ரூ. 6.00- 8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 12.00-14.00 | ரூ. 10.00-13.00 | ரூ. 12.00-16.00 |
| வெங்காயம் | ரூ. 18.00-23.00 | ரூ. 18.00-29.00 | ரூ. 20.00-28.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 29.00-30.60 | ரூ. 29.00-30.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6.00- 7.00 | ரூ. 5.00- 7.00 | ரூ. 6.00- 8.00 |
| வெண்டைக்காய் | ரூ. 15.00-18.00 | ரூ. 7.00-13.00 | ரூ. 15 00-20.00 |
| செத்தல்மிளகாய் | ரூ. 58.00-60.00 | ரூ. 57.00-59.00 | ரூ. 60.00-65.00 |

### பாக். மீது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பாடு செய்திருந்தது;

லட்சக்கணக்கான மக்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் ஜனதாதள் கட்சிக்கு அரசாங்கத்துக்கு வெளியில்இருந்து ஆதரவுகொடுத்து வரும் கட்சிகளுள் பாரதிய ஜனதாக்கட்சி முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## மட்டுநகரில் படகு பவனி

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த மே தின ஊர்வலம் நேற்று முன்தினம் படகுப்பவனியுடன் சிறப்பாக நடைபெற்றது..

மறுபுறத்தில் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான மேதின ஊர்வலம் நகரின் பல்வேறு வீதி வழியாகச் சென்று காந்தி சதுக்கத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தின் முடிவில் காந்தி சதுக்கத்தில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு.பொன்.வேணுதாஸ் தலைமை வகித்தார். விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் பிரதித் தலைவர் திரு.எஸ். கரிகாலன், மாவட்ட அமைப்பாளர் திரு. விசு. மட்டக்களப்பு மாவட்டத் தளபதி கருணா, மற்றும் கே. எல். ஜவாப் ஆகியோரும் பல தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

### பத்திரிகையா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் யோகியும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். பொறுப்பாளர் திரு. ராஜன் ஆகியோரும் கூட இருந்தனர்.

பத்திரிகைகளின் இன்றைய நிலைமைகள் குறித்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ஒ)

### படையினர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் அப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதில் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும்—

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் படைவட்டாரங்கள் தெரிவித்தன (உ)

### புனர் வாழ்வு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

-செலவு விவரங்கள் பற்றி ஆராய்ந்ததாகவும்--

அதையடுத்தே மோசடிகள் பற்றி சந்தேகம் எழுந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியுடன் சம்பந்தப்பட்ட முக்கிய அரசியல்வாதி ஒருவர் புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளுக்கு என வெளிநாட்டினால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதிக்கு ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ)

பசளை வியாபாரிகளே!




வி- கலவை

ரி.டி.எம். கலவை

யூரியா

மற்றும் பசளை கலவைகள்

ஒரு தொன் விலை ரூ.5900/-உம் அதற்கு மேலும்

இப்போது விற்பனைக்குத் தயாராக உள்ளன.

அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிடெட்
95 ஹைட் பார்க் கோணர் கொழும்பு 2

TRADLANKA 285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

03 - 05 - 1990 வியாழக்கிழமை

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 568, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

# சுமார் ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளை திருப்பி அனுப்ப இலவச விமான டிக்கெட்!

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, மே. 3
இலங்கையில் தங்கியுள்ள இந்தியப் பிரசா உரிமை பெற்ற சுமார் ஒருலட்சம் தோட்டத் தொழிலாளர்களை நாம் தொடர்ந்து இங்கு வைத்திருக்க முடியாது. அவர்களை திருப்பியனுப்பவதற்கு இலவச விமான டிக்கெட்டுகளை வழங்க இலங்கை அரசு தயாராக இருக்கிறது.

— இப்படிக் கூறினார் பெருந்தோட்ட தொழில்த் துறை அமைச்சரும் பாகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா.

பெருந்தோட்டத் தொழிற் துறை அமைச்சு அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அதுபற்றிய செய்தி சுருக்கமாக உதயனில் கடந்த புதன் கிழமை வெளிவந்தது.

அச்செய்தியாளர் மாநாட்டில் வெளியான மேலும் சில தகவல்கள் இங்கு தரப்படுகிறது.

அமைச்சர் விஜேரத்தினா சொன்னதாவது:

இலங்கையில் தங்கியுள்ள இந்தியப்பிரசாஉரிமைபெற்ற சுமார் ஒரு லட்சம் மலையகத் தோட்டத் தொழிலாளருக்கும் நாம் தொடர்ந்தும் வேலை வழங்கிக் கொண்டிருக்க முடியாது.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்படும் இலங்கையருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டியுள்ளது.

மனிதத் தன்மையற்ற முறையில் நாம்நடக்க விரும்பவில்லை. யதார்த்தத்தை நாம் சந்திக்க வேண்டியுள்ளது.

சுமார் ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளும் தாயகம் திரும்ப இலவச விமான டிக்கட்டுக்களை வழங்க இலங்கை அரசு தயாராக உள்ளது.

கேள்வி:- இந்த ஒருலட்சம் தோட்டத் தொழிலாளரும் இந்தியாவுக்கு அனுப்பப்படுவதை அமைச்சர் தொண்டமான் எதிர்க்கிறாரே?

இந்தியாவில் அகதிகளாகத் தங்கிஉள்ள இலங்கைப் பிரசா உரிமை பெற்ற இந்திய வம்சாவழியினருக்குப் பதிலாக இங்குள்ள இந்தியப் பிரசைகளுக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கும்படி அமைச்சர் தொண்டமான் கேட்கிறாரே!

ரஞ்சன்: இ. தொ. கா. இந்த நிலைப்பாட்டை எப்படி எடுக்க முடியும்? அவர்கள் இந்தியப் பிரசா உரிமை கோரி விண்ணப்பித்தவர்கள் அவர்கள் போயே ஆக வேண்டும்.

இந்தியப் பிரசைகளுக்காக எப்படி இ. தொ. கா. பேச முடியும்? இந்தியப் பிரசைகளை இந்திய அரசு பார்த்துக்கொள்ளும்.

இந்தியாவில் உள்ள எண்ணிக்கைக்கு இங்குள்ள எண்ணிக்கையை மாற்றிக் கொள்ள இலங்கை சம்மதிக்காது

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியப் பிரசா உரிமை பெற்றவர்களில் ஒரு பகுதிதான் இந்த ஒரு லட்சம் பேர்.

கேள்வி:- இந்திய-இலங்கை ஒப்பந்தம் 'இறந்து' விட்டது என்று நாம் நினைத்தோம்.

ரஞ்சன்:- இல்லை. அது சாகவில்லை சர்வசன வாக்கெடுப்பு மட்டும் நடத்தப்படவேண்டும். கப்பல் சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

கேள்வி:- இந்தியா அதற்கு மறுத்தால்.........?

ரஞ்சன்:- ஒப்பந்தத்தை அது கெடுப்பதாக இருக்கும்.

கேள்வி:- இந்தியப் பிரசைகளை எப்போது திருப்பி அனுப்ப இருக்கிறீர்கள்?

ரஞ்சன்:- இந்தியா கப்பல் சேவையை ஆரம்பித்தவுடன். எப்படியாயினும் இந்தியப் பிரசைகள் தாயகம் திரும்ப திருவனந்தபுரம் வரை இலவச விமான டிக்கட் வழங்க இலங்கை அரசு தயார். இந்த நடைமுறை ஆரம்பித்து விட்டது. அவர்கள் இப்போது போகமுடியும்.

கேள்வி:- இவர்களைத் திருப்பி அனுப்புவது அரசியல் பிரச்சினையை ஏற்படுத்துமே?

ரஞ்சன்:- யார் அதனைக் கவனிக்கப் போகிறார்கள்? சரியான நேரத்தில் சரியானதைத்தான் அரசு செய்யும். அரசியல் பிரச்சினைகள் குறித்து கவலைப்பட்டால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது.

வாழ்க்கையில் யதார்த்தத்தை எதிர்நோக்க நாம் தயாராக வேண்டும். அவர்கள் ஆறு வருடங்களுக்கு முன்னர் தாயகம் திரும்பியிருக்க வேண்டும்.

கேள்வி: இந்தியாவுடன் இன்னொரு சொற்போர் ஏற்படுமா?

ரஞ்சன்: இல்லை. அவர்கள் திரும்பத்தான் வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக் கொள்கிறது. ஒரே தரத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை முயல்கிறது. ஜனாதிபதி போல் கொள்கை அடிப்படையில் நாம் பணியாற்ற வேண்டும்.

கேள்வி: இது தொடர்பாக இந்தியா போவீர்களா?

ரஞ்சன்: ஏன்? எமது தூதர் அங்கு இருக்கிறார். அவர் கவனிப்பார். இவற்றுக்கு எல்லாம் வெளிநாட்டுச் செலாவணியைச் செலவழிக்கத் தேவை இல்லை.

கேள்வி: இந்தியாவைப் பார்க்காமல் இலங்கையே கப்பல் சேவையை நடத்தி இந்தியப் பிரசைகளைத் திருப்பி அனுப்பி வைக்கலாமே?

ரஞ்சன்: முடியும். கப்பல் வாங்க வேண்டும். இன்னும் பல விஷயங்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. (உ-எ)

## பரந்தனில் ஊர்வலம்

கிளிநொச்சி. மே 3
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாபெரும் மே தின ஊர்வலம் ஒன்று பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி பரந்தன் விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, உப்பளம், விவசாய ஆராய்ச்சி நிலையம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு சங்கம் ஆகியவற்றின் ஊழியர்களும், வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகளின் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

ஊர்வலத்தில் "பேரினவாத சக்திக்கு அடிபணியோம்", சகல அடக்கு முறைகளையும் உடைத்து எறிவோம்" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. [ஒ-76]

## முல்லைத்தீவு நகரிலும்

முல்லைத்தீவு. மே 3
முல்லைத்தீவு நகரில் மே தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வீதிகள் மகர தோரணங்கள் வாழைகள், சிவப்புக் கொடிகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டு நகர் விழாக் கோலம் பூண்டிருந்தது.

சகல வியாபார ஸ்தாபனங்களும் தேனீர்க் கடைகளும் மூடப்பட்டிருந்தன.

பிற்பகல் அன்னை வேளாங்கண்ணி ஆலய முன்றலில் இருந்தும், இ. போ. ச. சூசையப்பர் ஆலய முன்றலில் இருந்தும் ஊர்வலங்கள் புறப்பட்டு முல்லைத்தீவு பஸ் நிலையத்தை அடைந்தன.

பஸ் நிலையத்தில் அமைத்த மேடையில் முல்லை வர்த்தக சங்கத் தலைவர் திரு. கே கிருஷ்ணசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முல்லைத்தீவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு முல்லைச்செல்வம் பனை அபிவிருத்திச் சங்க இணைப்பு அதிகாரி திரு. அ. அற்புதராசா ஆகியோரும் மற்றும் சிலரும் மே தினம் அதன் நோக்கம் பற்றி உரை நிகழ்த்தினர். [ஒ-92]

## தொழில் ஏஜன்ஸிகளின் மோசடியை ஒழிப்பேன்முடியாவிடில் பதவியை ராஜினாமா செய்வேன்

### தொழில் அமைச்சர் சபதம்

கொழும்பு, மே. 3
ஏழை மக்களின் பணத்தை சுரண்டும் மோசடித் தொழில் ஏஜன்ஸிகளை ஒழிக்கும் முயற்சியில் தோல்வி கண்டால், நான் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்து விடுவேன்.

தொழில் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தொழில் ஏஜன்ஸிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு சொன்னார்.

இக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடந்தது.

அமைச்சர் மேலும் கூறுகையில் "மோசடி ஏஜன்ஸிகளின் பிடியில் ஏழைக் கிராம மக்கள் அகப்பட்டுத் தவிக்கிறார்கள், இதனால் அரசு கிராம மக்களை எதிர் நோக்க முடியாமல் உள்ளது"— என்றார். (ஒ-எ)

## யாழ். மணிக்கூட்டு வீதி மதகுகளை உடன் திருத்த மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 3
போக்குவரத்துக்குத் தடையாக உள்ள யாழ். மணிக்கூட்டுவீதி மதகைத் திருத்த மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மணிக்கூட்டுக்கும் ஹோட்டல் அசோக்குக்கும் சமீபமாக உள்ள இரு வீதிகளின் மதகுகளும் பலத்த சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து அடிக்கடி தடைப்படுவதுடன்விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதனால் இரண்டரை லட்சம் ரூபா செலவில் இந்தமதகுகளைப் புனரமைக்க மாநகர சபை நடவடிக்கை எடுத்து கேள்விப்பத்திரம் கோரியுள்ளது. (ஒ-31)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் [illegible] தில் 03 - 05 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செய்திச் சாரம்

### மாகாண சபை அமைச்சரின் சாரதி கைது!

கொழும்பு, மே 3
பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடத்தப்பட்டது தொடர்பாக ஊவா மாகாண சபை அமைச்சர் ஒருவரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். [ஒ எ]

### கம்பியூட்டர் செய்முறை பரீட்சை

யாழ்ப்பாணம், மே 3
யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட விஞ்ஞான பீட மாணவர்களுக்கான கம்பியூட்டர் செய்முறைப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறும். (ஒ-7)

### ஆதீனத்தில் ஞாயிறன்று சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 3
நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில்எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளையின் சந்தான குரவர் உமாபதி சிவாச்சாரியார் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவு இடம்பெறும் (ஒ-7)

### விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 3
தீவிரவாதிகள் சரணடைவதற்காக நியமிக்கப்பட்ட மாவட்டக் குழு தனது விசாரணைகளை இன்று (வியாழன்) முதல் மூன்று நாட்களுக்கு புத்தளத்தில் நடத்தவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு புத்தளம் நகர மண்டபத்தில் விசாரணைகள்ஆரம்பமாகும். (ஒ-எ)

### உப தபாலதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 3
கொழும்புத்துறை உப-தபால் அலுவலக உப- அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி வர்த்தமானியில் இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவத்தை யாழ்- தபால் அத்தியட்சகரிடம் பெறலாம். (ஒ-3)

### கிளிநொச்சியில் குப்பை போட தகர வசதி

கிளிநொச்சி, மே 3
கிளிநொச்சி நகரின் முக்கிய இடங்களில் குப்பை போடும் தகரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட இந்த தகரங்களை கரைச்சி பிரதேச சபை வர்ணம் பூசி வைத்துள்ளது. (ஒ-76)

### ஜப்பான் உதவும்

கொழும்பு, மே 3
இலங்கையில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய ஜப்பான் அரசாங்கம் ஒரு கோடி 20 லட்சம் ரூபாவை வழங்க இருக்கிறது.

இத் தகவலை விளையாட்டு அமைச்சு நேற்று வெளியிட்டது. (ஒ)

### பொலீஸின் சடலம் சொந்த ஊருக்கு

கிளிநொச்சி, மே 3
கடந்த திங்கட்கிழமை இரவு மெயில் ரயிலில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சிங்கள பொலீஸ் கான்ஸ்டபிள் வில்லியம் ஜெயசேகராவின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் (செவ்வாய்)மாலை சடலம் ஹெலிக்கொப்டர் மூலம் அவரது சொந்த ஊரான வறக்காப்பொலைக்கு எடுத்துச்செல்லப் பட்டது.

இரண்டரை வருடங்களுக்கு முன் சேவையில் சேர்ந்த அவருக்கு வயது 28. (ஒ-76)

### இருவரின் சடலங்கள்

கொழும்பு, மே 3
தெமட்டகொட ரயில்நிலையம் அருகில் இரண்டு பேரின் சடலங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை காணப்பட்டன.

அவற்றில் ஒருவர் ஆண். மூளாய், சுழிபுரத்தைச் சேர்ந்த 37 வயதான செல்வராசா வைரமுத்து என்று அவர் அடையாளங் காணப்பட்டார்.

மற்றது பெண்ணின் சடலம். அவர் யார் என்பது அடையாளங் காணப்படவில்லை.

இருவரினதும் உடல்களில் வெட்டுக்காயங்கள் இருந்தன.

இக்கொலைகள் திங்கள் இரவு 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நடைபெற்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (இ-எ)

### வெப்பத்தால் கோழிகள் இறக்கின்றன

கொழும்புத்துறை, மே 3
கடும் வெப்பம் காரணமாக யாழ் மாவட்டத்தில் கொழும்புத்துறை, மணிப்புரி, நெடுங்குளம், அரியாலை, கொக்குவில், கோண்டாவில் போன்ற இடங்களில் கோழிகள் ஒருவகை நோயால் (தூக்கம்) பீடிக்கப்பட்டுள்ளன.

நோய்தொடங்கி இரண்டு மூன்று நாட்களில் கோழிகள் இறக்கின்றன. குஞ்சுகள் 12 மணித்தியாலத்திற்குள் இறக்கின்றன. இந்நிலை தொடருமானால் கோழிகள் யாவும் முற்றாக அழியும்நிலை ஏற்படலாம் எனக் கோழி வளர்ப்பவர்கள் கவலை அடைகின்றனர். (ஒ-30)

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலத்தில் இருக்கும் அரிய நூல்களை தமிழில் மொழிபெயர்க்கக்கூடிய மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. வயதெல்லை இல்லை. 10-5-1990 அன்று காலை 9 மணிக்கும் — 1 மணிக்கும் இடையில் தேவையான தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகந்தரவும். திறமை, அனுபவம் என்பவற்றிற்கேற்ப சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு :
இல. 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(அசோகா ஹோட்டலுக்கு முன்பாக)
(3400)

## கிருஷ்ணானந்தன் ஞாபகார்த்த கல்வித் திட்டம்

யாழ்ப்பாணம், மே 3
அமரர் கிருஷ்ணானந்தன் ஞாபகார்த்தமாக கல்வி, சமூகம் தொடர்பான செயற்திட்டங்களை வகுத்து அமுல்படுத்தும் பொருட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் நிர்வாகக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்படும். [இ]

## மீசாலை சூட்டுச் சம்பவம்; பொலிஸ்மா அதிபர் கருத்து

கொழும்பு, மே. 3
மீசாலையில் ரயிலில்வைத்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கருத்து வெளியிட்டார்.

" இந்த கான்ஸ்டபிள் கத்தியால் குத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். ரயிலில் உள்ள உணவு விடுதியில் வைத்து இத்தாக்குதலை இரண்டு இளைஞர்கள் நடத்தினர்.

ஈ. பி. ஆர். எல். எவ். ஆதரவு பெற்ற தமிழ் தேசிய இராணுவத்தினர்தான் இதனைச் செய்தனர்" -இப்படி பொலீஸ் மா அதிபர் குற்றஞ் சாட்டினார்.

கொலைப்பழியை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மேல் போட தமிழ் தேசிய இராணுவத்தினர் முயற்சிப்பதாகவும் பொலீஸ் மா அதிபர் சொன்னார்.

இதனிடையில் பொலீஸ்மா அதிபரின் குற்றச் சாட்டை ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் கடுமையாக மறுத்துள்ளது. (உ-எ)

## அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வி!

### இறுதியாட்டத்தில் பாக்., ஆஸி!

ஷார்ஜா, மே 3
ஷார்ஜாவில் 'ஒஸ்ரலேசியா' கிண்ணத்துக்காக நடைபெறும்கிரிக்கெட்போட்டியின் நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணி ஆஸ்திரேலிய அணியிடம் 114 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்றிருக்கும் பாகிஸ்தான், ஆஸ்திரேலியா அணிகள்நாளைநடைபெறும்இறுதியாட்டத்தில் மோதவிருக்கின்றன.

நேற்றைய அரையிறுதிஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி வழங்கப்பட்ட 50 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்புக்கு 332ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.5 ஓவர்களில் 218ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சபாரட்னம் இலட்சுமி

திருமதி சபாரட்னம் இலட்சுமி காலமானார்.

இவர் கரம்பொன் கிழக்கு பாலக்காடு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும், அமரர் சபாரட்னத்தின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம், சாந்தி, சாந்தா (ஆசிரியை, யா / சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்), கீதா, அனுராதா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மவதி, கொத்தலாவலை, சிவானந்தன், தனேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், கஜேந்திரன், சியாணிகா, நதீசன், சுஜனி, நவின் தர்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து சுப்பிரமணியம், கந்தையா, செல்லம், கனகம்மா, மனோன்மணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03-05-1990) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. தனபாலசிங்கம்
பாலக்காடு,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
[3501]

### திருமதி மாகிறேற் நல்லையா மரியதாஸ்

திருக்குடும்ப கன்னியர் மடத்து முன்னாள் ஆசிரியை திருமதி மாகிறேற் நல்லையா மரியதாஸ் (மாணிக்கம்) 29-04-90இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நல்லையா மரியதாசின் அன்பு மனைவியும் தவராஜா [அவுஸ்திரேலியா], அமலதாஸ்[U.K.] இவர்களுடைய அன்புத்தாயாரும், சாமிநாதர், திரேசம்மாவின் அன்புச் சகோதரியும், அந்தோனியாப்பிள்ளை சாமிநாதர் [J. P.] அவர்களின் மைத்துனியும் பிலமினா, நவமணியின் அன்பு மாமியாரும் சாந்தி, இவாஞ்சலின் அசோக் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 3. 5. 90 வியாழக்கிழமை ாலை 4 மணிக்கு சூராவத்தை இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

-தகவல்-
சாமிநாதர் இசிதோர்
சூராவத்தை,
சுன்னாகம்.
(12992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org